பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 620 024

**ஏப்ரல் 2020 இளநிலை மற்றும் முதுநிலை நிலுவைத்தாள்களுக்கான (Supplementary Examinations) எழுதும் மாணாக்கர்கள் உரிய தேர்வுக் கட்டணம் செலுத்தி தேர்வுகள் எழுத பதிவு செய்துள்ள மாணாக்கர்களுக்கு மட்டுமான வழிகாட்டுமுறைகள்.**

மாணாக்கர்களுக்கான அறிவுரைகள்

- ஏப்ரல் 2020 தேர்விற்கு இளநிலை மற்றும் முதுநிலை பாடங்களுக்கு இறுதிப் பருவம் தவிர பிற பருவங்களின் நிலுவைத்தாள்களுக்கு **(Supplementary Examinations)** பதிவு செய்துள்ள மாணாக்கர்கள் மட்டும் தேர்வினை எழுத வேண்டும்.
- ஏப்ரல் 2020 இணைய வழியாக நடத்தப்பட்ட தேர்வுகளைப் போன்றே இத்தேர்வினையும் மாணாக்கர்கள் எழுதிட வேண்டும்.
- இளநிலைப் பாடங்களுக்கு 24.02.2021 அன்றும் மற்றும் முதுநிலைப் பாடங்களுக்கு 03.03.2021 அன்றும் தொடங்கி இணையவழியாக நடைபெற உள்ள தேர்வினை எழுத வேண்டும்.

இளநிலை பாடங்கள்:

அ. 2017-2020 கல்வியாண்டு - நிலுவைத்தாள்கள் மட்டும் (Ist to Vth Semester)
ஆ. 2018-2021 கல்வியாண்டு - நிலுவைத்தாள்கள் மட்டும் (Ist to III Semester)
இ. 2019-2022 கல்வியாண்டு - நிலுவைத்தாள்கள் மட்டும் (Ist Semester)
ஈ. 2016 மற்றும் அதற்கு முன் உள்ள கல்வியாண்டில் பயின்ற மாணவர்கள் இறுதிப் பருவ பாடங்கள் தவிர்த்து பிற பருவ பாடங்களின் நிலுவைத்தாள்கள்

முதுநிலை பாடங்கள்

அ. 2018-2020 கல்வியாண்டு - நிலுவைத்தாள்கள் மட்டும் (Ist to III Semester)
ஆ. 2019-2021 கல்வியாண்டு - நிலுவைத்தாள்கள் மட்டும் (Ist Semester)
MBA: 2019-2020 கல்வியாண்டு மாணவர்கள் - நிலுவைத்தாள்கள்
MCA: நிலுவைத்தாள்கள் மட்டும்
PG, MBA&MCA : 2017 மற்றும் அதற்கு முன் உள்ள கல்வியாண்டில் பயின்ற மாணவர்கள் இறுதி பருவ பாடங்கள் தவிர்த்து பிற பருவ பாடங்களின் நிலுவைத்தாள்கள்.

- மாணாக்கர்கள் தங்களுடைய நிலுவைத்தாள்களுக்கான பதிவுக்கட்டணத்தினை அந்தந்த கல்லூரிகளில் 23.02.2021-க்குள் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். இளநிலை, முதுநிலை பாடங்களுக்கான பதிவுக்கட்டணம் நிலுவைத்தாள் ஒன்றுக்கு ரூ.50/-
- தேர்வுக்கால அட்டவணை 20.02.2021 அன்று பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும்.
- தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையில் Descriptive type முறையில் தயாரிக்கப்பட்டு தேர்வு நடைபெறும் நாளன்று கல்லூரி முதல்வர்களின் மின்னஞ்சல் வழியாகவும் மற்றும் பல்கலைக்கழக இணையதளம் (www.bdu.ac.in ).வழியாகவும் அனுப்பப்படும்.
- ஒவ்வொரு நாளும் நடைபெறவிருக்கின்ற தேர்வுகளை மாணாக்கர்கள் எழுதி விடைத்தாள்களை கல்லூரியில் நேரிடையாக அன்றைய தினமே ஒப்படைக்க வேண்டும். கல்லூரியில் நேரில் ஒப்படைக்க இயலாதவர்கள் அன்றைய தினமே தபால் மூலமாகவோ அல்லது கல்லூரி முதல்வரின் மின்னஞ்சல் வழியாகவோ ஒப்படைக்க வேண்டும். இது தொடர்பாக மாணாக்கர்கள் தத்தம் கல்லூரி துறைத்தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ள வேண்டும்.

தேர்வு நெறியாளர்(பொ.) 17/2/21